[2013 அக்டோபர் 29

48—

குளிர்பதனக் கிடங்கு

***5491—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் பகுதியில் வேளாண் விளை பொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் உழவர் சந்தையில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஆத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவுகொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. கட்டுமானப் பணிகள் முடிவுற்றவுடன் குளிர்பதனக் கிடங்கு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி கண்ட பெண், பாரதம் இனி உங்கள் பின்னே என்று, பார்போற்றும் பாரதத் தாயாம் எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கோரிக்கையினை நிறைவேற்றும்*

வகையில் பணிகள் நடைபெற்று வருவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

சொந்தக் கட்டடம்

***3688—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், சௌந்தரபாண்டியபுரத்திலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், தெற்கு கள்ளிக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 384 குடும்ப அட்டைகளுடன் சௌந்தரபாண்டியபுரம் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர ஏதுவாக இடமும், நிதியும் ஒதுக்கக் கோரி, திருநெல்வேலி மாவட்ட திட்ட அலுவலர் அவர்களுக்கு 14–2–2013 அன்று கடிதம் எழுதப்பட்டு, மீண்டும் 21–10–2013 அன்று நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்திடமிருந்து பதில் வரும்பட்சத்தில், போதிய நிதி ஒதுக்கீடு பெற்ற பின்னர் இந்நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.